Registered as a Newspaper

# உதயன்


பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 301

சனிக்கிழமை 23 செப்ரெம்பர் 2023

புரட்டாதி



திலீபனின் நினைவேந்தலுக்கு

# தடை கோரிய மனுவை பரிசீலிக்க மன்று மறுப்பு!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 23

யாழ்ப்பாணத்தில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடைகோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மீண்டும் மனுத்தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அந்த மனு பரிசீலிக்கப்படாமல் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது. »11

## கொழும்புச் 'சட்டக்குழுவின்' முகத்தில் கரி

## ஹெலிச் செலவு 'அநியாயம்'



தியாகதீபம் திலீபனின்

## ஆவணக் காட்சியகம் நேற்றுமாலை திறப்பு!

யாழ்ப்பாணம், செப். 23
தியாகதீபம் திலீபனின் வாழ்வையும் வரலாற்றையும் தியாகத்தையும் பறைசாற்றும் விதமாக ஆவணக் காட்சியகம் »11

## திலீபனை அஞ்சலிக்க எந்தத் தடையுமில்லை

பருத்தித்துறை நீதிமன்றமும் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செப். 23
தியாகதீபம் திலீபன் நினைவு ஊர்திப் பவனிக்கு பருத்தித்துறை பொலிஸார் தடைகோரி மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில், பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று அந்தக் கோரிக்கையை நிராகரித்தது. »11

## திலீபனுக்கு அஞ்சலி - பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிவாஜிலிங்கத்துக்கு குற்றப்பத்திரம்

கொழும்பு, செப். 23
2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்தமை அல்லது பங்குபற்றியமை தொடர்பில் »09

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

## சர்வதேச விசாரணை அவசியம் இல்லையாம்!

அடிக்கிறார் மைத்திரி 'அந்தர்பல்டி'

கொழும்பு, செப். 23
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், நாளை போர் தொடர்பில் தமிழ்ப் புலம்பெயரிகள் சர்வதேச விசாரணையைக் கோரலாம். எனவே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலும் சர்வதேச விசாரணை அவசிய »11



## வட்டு. தமிழரசுவில் திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 23
தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நேற்று »11

வவுனியாவில்

## மோ.சைக்கிள் - 'பட்டா' விபத்து; ஸ்தலத்திலேயே ஒருவர் சாவு!

வவுனியா, செப். 23
வவுனியா, ஏ-9 வீதி, பறண்நட்டகல் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். சிவசேகரம் தினேசன் என்பவரே உயிரிழந்தவராவார். »11

## நீதிக் கட்டமைப்பை விமர்சிக்கவேண்டாம்

சபாநாயகர் வலியுறுத்து

கொழும்பு, செப். 23
நீதிபதிகளையோ, நீதிமன்றத்தின் தீர்ப்புக்களையோ நாடாளுமன்றத்துக்கு உள்ளேயோ, வெளியேயோ விமர்சிக்கவேண்டாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார். »11

நாகர்கோவில் படுகொலை

## 28 ஆவது நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வம்!

யாழ்ப்பாணம், செப். 23
யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது 1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி இலங்கை »11

## 9 வயதில் துஷ்பிரயோகமான சிறுமி 15 வயதில் மீண்டும் துஷ்பிரயோகம்

சிறியதந்தையால் கர்ப்பமான அவலம்

முல்லைத்தீவு, செப். 23
9 வயதில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமியொருவர் ஆறு வருடங்களின் பின்னர் குடும்பத்தாருடன் இணைக்கப்பட்ட நிலையில், அவர் மீண்டும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறுமி தற்போது கர்ப்பமாக உள்ளார் என்பதை »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச விசாரணை

# ஏற்கத் தயாராம் பிள்ளையான்; சாட்சியளிக்க தயாராம் ஆசாத்

கொழும்பு, செப். 23
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு சர்வதேச விசாரணைக்கு நான் தயார் என்று பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா,

"குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக, இந்தத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும்" - என்றார்.

அதன்போது குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், "என் மீது போலியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தவேண்டாம். ஈஸ்டர் தாக்கதல் தொடர்பில் நான் சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்."- என்றார்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான சாட்சியங்களை சர்வதேச விசாரணையில் ஒப்படைத்து சாட்சியமளிக்கத் தயார் என ஆசாத் மௌலானா ஜெனிவாவில் அறிக்கையொன்றை வெளியிட்டு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல அரசியல் கொலைகள் தொடர்பான முக்கியமான மற்றும் இரகசியத் தகவல்கள் தன்னிடமுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ச-இ)

# ஜெனிவா பேசுபொருளுக்கே 'சனல்-4' காணொலி

### அரசியல் செய்யவேண்டாமாம் ஆளுந்தரப்பு வேண்டுகோள்



**கொழும்பு, செப். 23**
**'சனல் - 4' இல் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி உண்மையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இலக்காகக் கொண்டது இல்லை. ஜெனிவாவில் பேசுவதற்காக விடுதலைப் புலிகளின் அபிமானிகளால் கொண்டு வந்த 'சனல் -4' வின் விளம்பரமே இது.**

- இவ்வாறு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் ஆளும் தரப்பின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில் சில காலமாக இன, மத வாத முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் உணர்வுபூர்வமானது. அதை அரசியலுக்கு பயன்படுத்த வேண்டாம்.

'சனல் - 4' இல் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி உண்மையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இலக்காகக் கொண்டது இல்லை என்று நான் நம்புகிறேன். ஜெனிவாவில் பேசுவதற்காக விடுதலைப் புலிகளின் அபிமானிகளால் கொண்டு வந்த 'சனல் -4' வின் விளம்பரமே இது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு தனிப்பட்ட அரசியல் கட்சிகளையோ, தனிநபர்களையோ குற்றஞ்சொல்ல வேண்டாம். புலிகள் அமைப்பின் பிரிவுகள் உடைந்து அரசாங்கத்துக்கு தகவல் கொடுத்ததால்தான் அவர்கள் பலவீனமடைந்தனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள் - என்றார். (ச-இ)

## பிரதமர் பதவி

# அழைப்பை ஏற்க மறுத்தார் சஜித்!

### மைத்திரி விளக்கம்

கொழும்பு, செப். 23
பிரதமர் பதவியை ஏற்குமாறு விடுத்த அழைப்பை கரு ஜயசூரியவும், சஜித் பிரேமதாஸவும் ஏற்க மறுத்ததாலேயே மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்க வேண்டிய நிலை அன்று ஏற்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு.

'மஹிந்த ராஜபக்சவை நான் பிரதமர் ஆக்கியமை தொடர்பில் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாதுகாப்புச் சபையைக் கூட்டுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நான் நிராகரித்தேன் எனவும் இங்கு உரையாற்றிய உறுப்பினர் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறு என்னிடம் கோரிக்கை விடுக்கப்படவில்லை. அந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்குவதற்கு முன்னர் கருஜயசூரியவிடம் நான்கு தடவைகள் பேச்சு நடத்தினேன். கொள்கை முரண்பாடு காரணமாக ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றமுடியாது. எனவே, பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுத்தேன். ஆனால் அதனை அவர் ஏற்கவில்லை.

அதன்பின்னர் சஜித் பிரேமதாஸவுக்கும் பிரதமர் பதவியை ஏற்க அழைப்பு விடுத்தேன். அவரும் அதனை விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் 2ஆம், 3ஆம் நிலையில் இருந்த தலைவர்கள் அழைப்பை ஏற்க மறுத்ததால்தான் மஹிந்தவை நியமிக்க வேண்டி ஏற்பட்டது' - என்றார். (அ-ம-44)



# முல்லைத்தீவில் படையினரின் உலக சமாதான நிகழ்வு

முல்லைத்தீவு, செப். 23
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் உலக சமாதான நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கடந்த காலங்களில் சமாதானமின்மையால் ஏற்பட்ட வடுக்களை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த நிகழ்வு இராணுவத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டது.

நிகழ்வில் முல்லைத்தீவை சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற 180 பாடசாலை மாணவர்களுக்கு சப்பாத்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து இசைநிகழ்வும் விருந்துபசாரமும் இடம்பெற்றன.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், முல்லைத்தீவு பதில் மாவட்டச் செயலர் அதிபர் க.கனேஸ்வரன், முல்லைத்தீவு இராணுவ பாதுகாப்பு தலைமையக பொறுப்பதிகாரி, படை அதிகாரிகள், துறைசார் திணைக்கள அதிகாரிகள், சர்வமதத் தலைவர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

# 'நிபா' வைரஸ் தொடர்பில் கவனம் செலுத்தக்கோரிக்கை

கொழும்பு, செப். 23
'நிபா' வைரஸ் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதால் அது தொடர்பில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி. நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

'நிபா' வைரஸ் இந்தியா, பங்களாதேஷ், சிங்கப்பூர் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்றது. உலக சுகாதார நிறுவனம் இதனை அதிக ஆபத்துள்ள வைரஸ் என அறிவித்துள்ளது.

இந்த வைரஸின் இறப்பு விகிதம் 40 முதல் 75 சதவீதம் வரை இருப்பதால் இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

சுகாதாரத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதனை கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் - என்று வலியுறுத்தினார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற விவாதத்தினால் புலனாய்வுப்பிரிவு பலவீனமாகும்



கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, செப். 23

நாட்டின் புலனாய்வுப் பிரிவை பாதுகாக்கப்பட வேண்டுமாயின் உளவுத் தகவல்கள் தொடர்பில் பகிரங்கமாக விவாதம் நடத்தப்படக்கூடாது. புலனாய்வுப் பிரிவின் இரகசியம், நகர்வுகள் என்பவை பாதுகாக்கப்பட வேண்டிவை. நாடாளுமன்றில் நடைபெறும் இந்த விவாதத்தைப் பார்த்தால் பயங்கரவாதிகள் கூட நிச்சயம் சிரிப்பர்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது: புலனாய்வுப் பிரிவு பாதுகாக்கப்படவேண்டியதொன்று. அதன் திறமை பற்றியோ இரகசியம் பற்றியோ, நகர்வுகள் பற்றியோ பகிரங்கமாக கதைக்கக்கூடாது. இந்தியா, அமெரிக்கா, ஜேர்மன், இஸ்திரேல், சீனா, இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் புலனாய்வுப் பிரிவு குறித்த எந்தவொரு தகவலையும் திரட்ட முடியாது. அந்தளவுக்கு அவை பலமாக இருக்கின்றன.

ஆனால் இங்கு நாடாளுமன்றில் நடந்தைப் பார்த்தால் கவலையாக உள்ளது. இந்த விவாதத்தைப் பார்த்தால் பயங்கரவாதிகளும், உளவு அமைப்பினரும் சிரிப்பார்கள்.

எனவே பிளவுபட்டுநின்று, தகவல்களை வெளியிட்டு நாட்டை அழிவு நோக்கி கொண்டு செல்லாது மக்கள் பிரதிநிதிகள் என்றவகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (ச-44)

## ஜூஸ் பைக்கெற்றுகளில் காலாவதி திகதி மாற்றம்!

தெல்லிப்பழையில் 6 பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், செப். 23

தெல்லிப்பழையிலுள்ள ஜூஸ் நிலையமொன்றில் ஜூஸ் பைக்கெற்றுகளின் காலாவதித் திகதியை மாற்றி குழந்தைகளுக்கு விற்பனை செய்த 6 பேருக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினரால் திடீர் சோதனைகள் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தெல்லிப்பழையிலுள்ள ஜூஸ் உற்பத்தி நிலையம் ஒன்றில் ஒரு சில வாரங்களே காலாவதித் திகதி இடக்கூடிய ஜூஸ்கள் பைக்கெற்றுகளில் ஒரு வருட காலப்பகுதி குறிப்பிட்டு அச்சிடப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து அவற்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 6 பேர் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.


சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அனைத்து ஜூஸ் பைக்கற்றுக்களையும் அழிக்க உத்தரவிட்ட நீதிமன்று 6 பேருக்கும் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது. (ச-இ)

## 'கூட்டுறவு நகர்' திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் இல.373 பிரதான வீதியில் அமைக்கப்பட்ட 'கூட்டுறவு நகர்' திறப்பு நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் இயக்குநர் சபை உறுப்பினர்கள் இதில் பங்கேற்று கூட்டுறவு நகர் கட்டடத்தைத் திறந்துவைக்கவுள்ளனர். (ச-159)



யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு தியாகதீபத்தின் வரலாற்றை அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் செல்லும் முகமாக துண்டுப்பிரசுரம் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்களிடம் நேற்று வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்பட்டது. (ஒ-125)

## கசிப்புடன் பெண் கைது

பண்டத்தரிப்பில் கசிப்புடன் 46 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சந்தேக நபர் பண்டத்தரிப்பு பகுதியில் விற்பனைக்காக ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைத்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-23)

## விபத்தில் சிக்கியவர் வடமராட்சியில் சாவு

யாழ்ப்பாணம், செப். 23

வீதி விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வந்த நபர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

மருதங்கேணி வடக்கு, தாழையடியைச் சேர்ந்த சின்னையா தனபாலசிங்கம் (வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு, தாழையடிப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-100)




ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலை கண்ணாயிருக்கவேணும் எண்டு சொல்லுவினம். இப்ப என்னடாவெண்டால் காரியத்தில கண்ணாயிருக்கக் கூடாதெண்டு ஆரியம் கூத்தாடியளை இறக்கிவிட்டு வேடிக்கைபார்க்குது. பொதுவாவே செப்ரெம்பர் 15 இல இருந்து 26 மட்டும் தமிழரின்ர பகுதியளில திலீபன் பற்றின நினைவுதான் எல்லாரிட்டையும் இருக்கும். இந்தக் காலத்தில எங்கட சனம் கலியாணவீடு மாதிரி கொண்டாட்டங்களைக்கூட வைக்கிறேலை. அந்தளவுக்கு திலீபன்ர தியாகத்துக்கு மதிப்பும், அஞ்சலியும் செய்யிற வழக்கம் முப்பத்தாறு வருசமா இருக்கு. கிட்டத்தட்ட இந்தப் பன்னிரெண்டு நாளையும் ஒரு விரதகாலம் மாதிரித்தான் தமிழர்கள் நினைப்பினம். இப்பிடி திலீபன்ர நினைவில இருக்கிறதெண்டது மறுவளமா அவரின்ர கோரிக்கைகளையும் திரும்ப நினைவூட்டும். அதோட பன்னிரெண்டு நாளா சாப்பிடாமல், தண்ணி குடிக்காமல் போராடின ஒரு தியாகியைச் சாகவிட்ட இந்தியா மேலையும் சனத்துக்கு ஒரு கோபம், திலீபன்ர நினைவேந்தல் காலகட்டத்தில தன்ரபாட்டில வரும். திலீபன்ர நினைவேந்தல், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிப் படுகொலை எண்ட ரண்டு விசயமுமே இந்தியாவுக்குச் சத்திராதிதான். எப்பிடியாவது தங்களுக்கு எதிரான உணர்வைக் கொண்டுவாற இந்த நினைவேந்தல்களை இல்லாமல் செய்யவோ, இருட்டடிப்புச் செய்யவோதான் இந்தியா ஒவ்வொருமுறையும் படாதபாடு படும். குறைஞ்சபட்சம் உந்தப் பேஸ்புக் மாதிரி சோசியல் மீடியாக்களிலையாவது வேற விசயத்தை 'ட்ரெண்ட்' ஆக்கி, தங்களுக்கு எதிரான விசயங்களை திசைதிருப்பிறதுக்கு நைசா நிறைய வேலையளை இந்தியா இஞ்ச செய்யிறது.

போனவருசம், பெரியாஸ்பத்திரிப் படுகொலை நினைவேந்தலுக்கு அடுத்தநாளே தங்கட குடியரசுதினக் கொண்டாட்டம் எண்டு சொல்லி, நாகலாந்தில இருந்து பாட்டுக்கோஷ்டியைக் கொண்டந்ததும் இதுக்குத்தான். ஆனால் அந்தப் பாட்டுக்கோஷ்டி தமிழில ஒருபாட்டும் பாடாதால இந்தியாவின்ர மடைமாத்துற வேலை பெரிசா எடுபடேலை. அதால இந்தமுறை கொஞ்சம் மூளையைக் கசக்கி, பிரபுதேவாவை கொழும்பில பட ஷூட்டிங் எண்டு இறக்கிச்சினம். ஆனால் பிரபுதேவா பிக்குவைக் கும்பிட்டது பெரிய சர்ச்சையாகிட்டுது. பிள்ளையார் பிடிக்கப் போய் கடைசியா அது 'பிரபுதேவாவா' மாறிட்டுது. ஆனாலும் அவை சோரேலை. விசுவாமித்திரரின்ர தவத்தைக் குலைக்க மேனகையை அனுப்பினமாதிரி, திலீபன்ர தியானத்தில இருக்கிற எங்கட இளசுகளின்ர மனதைக் குலைக்க 'ஆண்ட்ரியா' எண்ட நடிகையை நல்லூரில இறக்கிச்சினம். பிரபுதேவா மாதிரி இந்த 'ஆண்ட்ரியா' எண்ட ஆயுதமும் புஸ்வாணமாகேலை. கொஞ்சம் பேஸ்புக் கிளுகிளுப்பானதுதான். ஆண்ட்ரியாவின்ர போட்டோவோட தங்கட படத்தையும் போட்டோஷொப்பில வெட்டி ஒட்டி கனபேர் போட்டவைதான். எண்டாலும் அந்தக் கிளுகிளுப்பும் கொஞ்சத்தில அடங்கிட்டு. திலீபன்ர நினைவேந்தல் முடிய இன்னும் மூண்டுநாள் இருக்கு. பாப்பம், இதுக்குள்ள இன்னும் ஆர் ஆரையெல்லாம் இறக்கப் போகினம் எண்டு.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தினப் போட்டியில் மன்னார் வலயம் 5 தங்கம்!



மன்னார், செப். 23

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில் 5 தங்கப்பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது மன்னார் கல்வி வலயம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த 16 ஆம் திகதி இந்த ஆண்டுக்கான மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்றன. இதில் கட்டுரை இலக்கியம் வரைதல் போட்டியில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி ஜெனிங்ஸ் அபிஷானி முதல் இடத்தையும், சிறுகதை ஆக்கத்தில் மன்னார் டிலாசால் கல்லூரி மாணவி வின்சன் ஜோர்ஜ் ஆன்புசானிக்கா, பாவோதல் போட்டியில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி ஜெயக்குமார் கனிஷ்கா, மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவி பாஸ்கரன் வினுக்சி ஆகியோர் முதலிடத்தைப் பெற்றனர். அதேபோன்று குழு நிகழ்ச்சியில் மன்னார் எருக்கலம் பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் பெற்று, 5 தங்கப்பதக்கங்களை மன்னார் கல்வி வலயம் தனதாக்கியுள்ளது.

அத்துடன் மேலும் பல போட்டிகளில் மன்னார் கல்வி வலயம் இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-213)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றம் கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. (ய-66)



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோயிலில் கடந்த 18ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற விநாயகர்சதுர்த்திப் பெருவிழாவில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் வீதி உலா வரும் திருக்காட்சி. (ய-66)



ஈவினை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருவிழா 11 தினங்கள் நடைபெறும். (ய-66)

## கைதடி ம. வித்தி பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 23

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள (விஞ்ஞான பாட) பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிரூபராணி அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. மதிதரன், கௌரவ விருந்தினர்களாக லண்டன் பழைய மாணவர் க.கோடீஸ்வரன், யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் சுகாதார உத்தியோகத்தர் ஞா.கிருபதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

## மானிய உரப்பதிவும் காலபோக கூட்டமும்

யாழ்ப்பாணம், செப்.23

தென்மராட்சி தெற்கு - கைதடி நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கைக்கான மானிய உரப்பதிவும் காலபோகக் கூட்டமும் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் அங்கத்தவர்கள் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு , தேசிய அடையாள அட்டை, வங்கி கணக்குப் புத்தகம், சந்தாப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (ச-9)

## மீலாத்துன் நபி தின நிகழ்வு மன்னாரில் மீளாய்வுக் கூட்டம்

மன்னாரில் நடைபெறவிருக்கும் 39 ஆவது தேசிய மீலாத்துன் நபி தின நிகழ்வு குறித்த முன்னாயத்த மீளாய்வுக் கூட்டம் புத்தசாசன சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தேசிய மீலாத்துன் நபி தின நிகழ்வு முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிலாவத்துறை முஸ்லிம் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதுடன் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளவுள்ள நிலையில் அத்தியாவசிய முன்னேற்பாடுகள் குறித்து கூட்டத்தில் மீளாய்வு செய்யப்பட்டது. (ச-60)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**துலாம்:** கணவன் -மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம் :** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடு நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் தெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீங்களும் உங்கள் நிர்வாகமும்

தியாகதீபம் திலீபனின் ஊர்தி மீதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் திருகோணமலையில் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் தொடர்பில் 6 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்றுமுன்தினம் மாலை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்படுவது வழமை. ஆனால் இந்த வழக்கில் சந்தேக நபர்களை விடுவிப்பதற்காக பொலிஸார் மன்றில் முன்வைத்த காரணங்கள்தான் விநோதமானவை. அவை இந்த நாட்டின் பொலிஸ்துறை – சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் எவ்வளவு தூரத்துக்கு இனத்துவேசத்துடன் அல்லது சிங்கள – பௌத்த சிந்தனைக் கட்டமைப்புக்குள் நின்றுகொண்டு பணியாற்றுகின்றார்கள் என்பதை வெளிச்சமிட்டிருக்கின்றது.

கைதானவர்கள் 6 பேரும் சிங்களவர்கள். இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு பிணை வழங்கப்படவில்லை. மீண்டும் அவசர வழக்காக நீதிமன்றில் பொலிஸார் அதனை எடுத்துக்கொள்ளச் செய்தனர். இவர்களை விடுவிக்காவிடின் சமாதானக் குலைவு அதாவது இனமோதல் ஏற்படும் அபாயம் இருப்பதாக மன்றில் விண்ணப்பம் செய்து விடுவித்தனர். வழக்கின் சந்தேகநபர்களை தடுத்து வைத்திருப்பதால் சமாதானக் குலைவு ஏற்படும் என்று சொல்லி சிங்களவர்களை விடுவிக்கச் செய்திருக்கின்றனர் பொலிஸார். மறுபுறம் சமாதானக் குலைவு ஏற்படும் எனத் தெரிவித்து தமிழர்களின் நினைவேந்தல் உரிமைகளை மறுதலிக்கச் செய்ய நீதிமன்றத்தை நாடும் பொலிஸார், சிங்களவர்களை தடுத்து வைத்திருப்பதால் சமாதானக்குலைவு ஏற்படும் என்று தெரிவித்து அவர்களை விடுவிக்கின்றனர். உண்மையில் சமாதானக்குலைவு ஏற்படாமல் தடுக்கவேண்டியதுதான் பொலிஸார் பணி. அப்படியானால் ஏதேனும் ஒரு கொலைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை,சமாதானக்குலைவு ஏற்படுமென்று கூறி விடுவிக்குமாறு விண்ணப்பம் செய்யலாமா? என்ற சந்தேகமும் இவ்விடத்தில் சகலருக்கும் எழவே செய்யும். இது தனித்துப் பொலிஸாரின் தவறு அல்ல. இந்த நாட்டில் சிங்கள – பௌத்த பேரினவாத வெறியில் ஊறிப்போன அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட நிர்வாகத்தின் சீத்துவக்கேடு. இந்த நாட்டின் ஒட்டுமொத்த அரசியந்திரமும் சிங்கள – பௌத்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே இயங்குகின்றது அல்லது இயக்கப்படுகின்றது . அந்தச் சித்தாந்தத்திடம் நீதி – நியாயம் எதனையும் எதிர்பார்க்க முடியாது.

திருகோணமலையில் ஊர்தி மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டவுடன் தெற்கின் எதிர்வினையாற்றல் எப்படியிருந்தது? சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தின் ஊடாக ஊர்தியைக் கொண்டு சென்றார்கள். விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சிங்கள மக்களுக்கு அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவரின் ஊர்தியைக் கொண்டு செல்லும்போது கோபம்வரத்தானே செய்யும் என்று இந்தத் தாக்குதலை நியாயப்படுத்தி கம்மன்பில, வீரவன்ஸ, தயாசிறி ஜயசேகர போன்றோர் குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் ஒன்றை மறந்து விட்டனர். அல்லது தமது வசதிக்காக மறைத்துக்கொண்டனர்.


தமது உறவுகள் ஒவ்வொருவரையும் துடிக்கத்துடிக்க கொன்றொழித்ததற்காக அல்லது காணாமல் ஆக்கியமைக்காக வடக்கு – கிழக்கில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகள் மீது தமிழ் மக்கள் தாக்குதல் நடத்தவில்லை. ஆனால். கம்மன்பில, வீரவன்ஸ, தயாசிறி போன்றோரின் நியாயத் தராசின் பிரகாரம், தமிழ் மக்கள் இங்குள்ள படைகள் மீது தாக்குதல் நடத்தினால் அது தவறல்ல. ஏனெனில், அவர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் அந்த அமைப்பு மீது தாக்குதல் நடத்துவது இயல்பு என்றால், அது தவறில்லை என்றால் தமிழ் மக்களையும் படைகள் மீது தாக்குதல் நடத்த இந்த சிங்கள – பௌத்த இனவாதிகள் தூண்டுகின்றனரா?

இந்த நாட்டின் சாபக்கேடே இப்படியான அரசியல்வாதிகள்தான். அரசியல்வாதிகள் இவ்வாறு இருப்பதால்தான் பொலிஸாரும், அவர்களுக்கு சற்றும் குறைவில்லாதவர்கள் போல நடந்துகொள்கின்றார்கள். ஆயிரம் நல்லிணக்க ஆணைக்குழு அமைத்தாலும் இந்த நாட்டில் மருந்துக்குக் கூட நல்லிணக்கம் என்பது இல்லை என்பதைத்தான் விநாடிக்கு ஒருமுறை பேரினவாதிகள் நிரூபித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

### நாளொரு நல்வார்த்தை

நாம் நேசிக்கும்போது, நம்மை விட சிறந்தவர்களாக மாற எப்போதும் முயற்சி செய்கிறோம்; நம்மை விட சிறந்தவர்களாக மாற நாம் முயலும் போது, நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் சிறப்பாகின்றன.

– பாலோ கோயலோ



# உள்ளக விசாரணை ஊழல் நிறைந்தது!

## சொல்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

**கொழும்பு, செப். 23**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மை கண்டறியப்படவேண்டும். உள்ளக விசாரணை ஊழல்மிக்கது என்பதால் சர்வதேச விசாரணையே நடத்தப்படவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

அவர் மேலும் கூறியவை வருமாறு,

உண்மையைக் கண்டறிவதற்கான ஊழல் அற்ற உள்ளக விசாரணை அவசியம் என்றாலும், அவ்வாறானதொரு தேசியப் பொறிமுறை உள்ளதா? இல்லை என்பதே புலனாகின்றது. சர்வதேச விசாரணைக்கு முதல் வாய்ப்பைவழங்கநான்தயாரில்லை. ஆனால் உள்ளக விசாரணைக்குரிய வாய்ப்புகள் எல்லாம் ஊழல் மிக்கவை. அதனால்தான் சர்வதேச விசாரணை கோரப்படுகின்றது.

இந்த விசாரணையைச் செய்வதற்கு தற்போதைய அரசுக்கு முதுகெலும்பு இல்லாவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் அது நிச்சயம் முன்னெடுக்கப்படும். பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் உறுப்பினர் என்ற வகையில் நாட்டு மக்களுக்கு இந்த உத்தரவாதத்தை வழங்குகின்றேன்.

உண்மையைக் கண்டறிந்தே தீருவோம். அரசியல் ரீதியில் பழிவாங்கல்களில் ஈடுபட மாட்டோம். அதேபோல போலிச் சாட்சிகளும் உருவாக்கப்படமாட்டாது - என்றார். (ஒ-44)

தமிழர்கள் போராட்டம்

# பின்கதவால் வெளியேறிய ஜனாதிபதி ரணில்



நியூயோர்க், செப். 23

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஐ.நா. முன்றலில் மக்கள் போராட்டம் நடத்தினர். போராட்டம்காரணமாக ரணில் பின்கதவால் ஐ.நா.வை விட்டு வெளியேறினார்.

தியாகி திலீபனின் ஊர்தியை சிங்கக்கொடி கொண்டு அடித்து நொருக்கிய சிங்கள பௌத்த இனவெறி அரசு ரணில் அரசு, ரணிலே வெளியேறு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே?, சிங்கள தேசமே இனப்படுகொலை செய்தது, ரணில் ஐ.நா.வுக்கு வருவது ஐ.நா.வுக்கு அவமானம், இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து. போன்ற முழக்கங்கள் போராட்டக்காரர்களால் உரத்து எழுப்பப்பட்டிருந்தது.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரமர் உருத்திரகுமாரன் பேசுகையில் நிரந்தர அரசியல் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பின் முக்கியத்துவத்தைக்கூறியது மட்டுமல்ல இலங்கையின் உண்மைக்கும், நீதிக்குமான ஆனைக்குழு தமிழர்களை ஏமாற்றுவதற்கான சதித்திட்டமே என்று கூறினார். மேலும் பௌத்தமயமாக்கல்,சிங்களக் குடியேற்றம் ஆகியவற்றில் ஐ.நா. தலையிடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (ஒ-இ)

**நாளை**

**24.09.2023**
**ஞாயிற்றுக்கிழமை**
**புரட்டாசி 07**

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 07 . 1949

இறப்பு 22 . 09 . 2023

### திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம்

கிளானை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் சாளையம்பட்டி, கீரிமலை வீதி, கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22.09.2023) வெள்ளிக்கிழமை காலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து (வெள்ளையப்பா) அசுவதி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற பொன்னு மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் (மணியம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் சூரியகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும். காலஞ்சென்ற சரஸ்வதி, திலகவதி மற்றும் புனிதவதி, காலஞ்சென்றவர்களான பகவதி, செல்வமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும். தேவமலர், வசந்தமலர், ரஞ்சிதமலர், அருந்தவராசா, தவராசா, சறோஜா, தேவிகா, விஜயகுமார், வசந்தகுமார், சித்திரா, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன், ஜெயவதனி, கலாவதனி, காலஞ்சென்ற சதீஸ்வரன் மற்றும் யாழினி, பாலபாஸ்கரன், நிஷா, ரகுவர்மன், ராகுலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கீரிமலை வீதி,**
**கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 52125)A-1

## 41 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 12 . 02 . 1933

உதிர்வு 14 . 08 . 2023

### அமரர் சிவபாக்கியம் சதாசிவம்

( சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன்துறை )

அன்புள்ள அம்மா,

கரு சுமந்தவள் கண் மூடினாள்
காவல் இருந்தவள் கண்ணீராகினாள்
நிலவு காட்டி சோறு ஊட்டிட
நித்தம் ஒரு கதை சொன்னவள்
சொல்லாது சென்றதும் ஏனோ
பரிதவிக்கும் பிள்ளைகள்.
பாசம் மறந்து பறந்தனையோ
கண்ணீர் பூக்களால் தொழுகின்றோம்
ஈசன் நிழலில் அமைதி பெறுவாய்
தாயே !

நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**219, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**குடும்பத்தினர்**

## பொலிஸ் பொறுப்பதிகாரியால் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

வவுனியா, செப்.23


ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி, அச்சுறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பாக வவுனியா ஊடக அமையம் வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளது. வவுனியா, ஓமந்தை, சின்ன விளாத்திக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அருகில் கற்குவாரி அமைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையம் முன்பாக கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதை அறிக்கையிடுவதற்காக ஊடகவியலாளர்கள் சென்றிருந்தபோது, அங்கு மக்களை அச்சுறுத்தும் வகையில் ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செயற்பட்டார் என்றும், அதை காணொலியாகப் பதிவு செய்த ஊடகவியலாளரின் கைபேசியைத் தட்டி அச்சுறுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-18)



## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 10 . 1945

மறைவு 22 . 09 . 2023

### முத்துத்தம்பி மகேந்திரன்

நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி மகேந்திரன் அவர்கள் நேற்று (22.09.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வனும். காலஞ்சென்றவர்களான வயிரமுத்து வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், இராசமணி அவர்களின் அன்புக் கணவரும், சித்திராதேவி (லண்டன்), கவிதா (மாவட்ட செயலகம்-முல்லைத்தீவு). தர்ஷாயினி (பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனை - மாங்குளம்). சோபனா (தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், கந்தசாமி, பரணீதரன், சிவகரன் ஆகியோரின் மாமனாரும், வினேஷ், பிரதிசா, கேமவாணி, அகனமுதன், குவிக்ஷன், ஹறினி, ஜதீஸ்தரன், சேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், புனிதவதி, புவனேந்திரன், இராஜஇராஜேஸ்வரி, கலாவதி, சரஸ்வதி, பிறேமாவதி, திலகவதி, அழகேந்திரன், ஞானேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுழிபுரம் மேற்கு,**
**சுழிபுரம்.**

**தொடர்பு :**
**குடும்பத்தினர்.**
**0777 592 622**

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம"

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 07 . 1936

இறப்பு 21 . 09 . 2023

### பொன்னுத்துரை நாகம்மா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாகம்மா அவர்கள் கடந்த (21.09.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னுத்துரையின் (பொடியப்பா) அன்பு மனைவியும், சிறிதரன் (Canada), மகேந்திரராசா, தெய்வேந்திரராஜா (Canada), கலைச்செல்வன் (வர்ணன் - Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்களேஸ்வரி (Canada), இந்திராணி, கேதீஸ்வரி (Canada), ரமணி (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், சின்னத்தம்பி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், லங்கதீபன், நிருத்திகன், மகிழ்ந்தினி - ரஜதசீலன், நிலக்ஷன், நிருஷன், சரணியா (வவுனியா பல்கலைக்கழகம்), தேனுகா- கஜன், துர்க்கா, சரண்யா, ஹறங்கனி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், கெல்வினின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பால்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**51/1, [illegible] லேன்,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்பு :**
**மகேந்திரராசா** 077 072 8329
**தெய்வேந்திரன் (மகன்)** +1 (416) 993 0883
**சிறிதரன் (மகன்)** +1 (647) 621 8787
**வர்ணன் (மகன்)** +1 905 599 2174

(CS 26329) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணிப்பாளருக்கு

# ஆதரவாகவும் எதிராகவும் கிளி.யில் 2 போராட்டங்கள்!

கிளிநொச்சி, செப். 23

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜனை இடமாற்றம் செய்யுமாறு கோரியும், இடமாற்றம் செய்ய வேண்டாமெனக் கோரியும் இரு தரப்பினரால் கிளிநொச்சியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வலயக்கல்விப்பணிப்பாளரை இடமாற்றம் செய்யுமாறு கோரிய கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த புதன்கிழமை வலயக்கல்வி அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது "ஊழல்வாதியைக் காப்பாற்றாதே", "ஆளுநரே நடவடிக்கை எடுக்காதது ஏன்?" போன்ற பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு போராட்டக்காரர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வலயத்தைச்சேர்ந்த அதிபர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சேர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு ஆதரவாக, "குட்டையை குழப்பி விடாதே", "எமது வலயத்தை பகடையாக்காதே" போன்ற பதாகைகளை ஏந்தி கல்விப் பணிப்பாளருக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-113)

## வீடு வாடகைக்கு உண்டு

தெல்லிப்பழை கட்டுவன் சந்தியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 826 7932

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. ஒருவர் அல்லது இருவர் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

076 497 3040

(cs 52210) (N.1)

## பராமரிப்பு

உங்கள் வீடு வளவுகளை சுத்தம் செய்து பராமரிப்பதற்கான வேலைகள் இருப்பின் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்

தொடர்பு: 074 325 7713

வடிவேல் இராசதுரை
மாவிட்டபுரம் வீதி, நகுலேஸ்வரம், கீரிமலை

(cs 52161) (N.1)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு பின்புறமாக கண்ணகை அம்மன் கோவிலுக்கு தெற்கு புறமாகவும் வெள்ளெருக்கு பிள்ளையார் கோவிலிற்கு செல்லும் வீதியில் நல்ல அயல் சூழலில் 6 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 076 654 5987

## வீடு வாடகைக்கு

தெற்கு புன்னாலைக் கட்டுவனிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியில் 5 1/2 பரப்புக் காணி (வீடுடன்) வாடகைக்குண்டு. ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். தரகர்கள் தேவையில்லை

076 733 3594

(cs 52168) (N-1)

## காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி அல்லிப்பளையில் 12 ஏக்கர் தென்னந்தோட்டம் (இரண்டாக பிரித்தும்) விற்பனைக்கு உண்டு. காய்க்கும் நிலையில் உள்ள தென்னை, மாந்தோப்பு, வயல், கயூ மரங்கள் மற்றும் வீடு, நீர்வசதி, மின்சார வசதி, கிணறு, குழாய்கிணறு என்பன உடைய தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை நேரடியாக தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 941 6766
077 667 2713

(cs 52219) (N-1)

## யாழ்நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 31/2 பரப்புக் காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் முழுமையாக உடன் விற்பனைக் குண்டு. இந்தக் காணி சுண்டுக்குளி தபாலநிலையத்திற்கு அருகாமையில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ளது. எதிர்பாக்கப்படும் விலை 55 மில்லியனுக்கு மேலாக எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:

- Whatsapp : +447963743585
- மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk-
- Local Contact : 021 222 7141 (Srilanka)

(cs 52141) (N.1)

## நோயாளர் பராமரிப்பு சேவைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். போதனா வைத்தியாசலையில் நோயாளர் நலன்புரிச் சங்க பராமரிப்பு சேவைக்கு ஆர்வமுள்ளவர்களிட மிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கோ அல்லது நேரில் வந்தோ உங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை 10.10.2023 முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியாசலை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
076 1000 046

(cs 52208 (N.1)

## இரண்டாம் ஆண்டு நினைவு



தோற்றம் 25 • 05 • 1939

மறைவு 14 • 09 • 2021

### அமரர் திருமதி செல்வராசா பரிமளம்

(திதி: ஆவணிமாத பூர்வபக்க அட்டமி)

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
ஈராண்டு ஆயிற்றோ
நீவீர் எம்மைவிட்டுப் பிரிந்து?
சொந்தபந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே!
என்றும் உம்மை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்!
பெற்றிடுக சாந்தி ! ஓம் சாந்தி!

என்றும் அன்புடன் நினைவுகூருகின்ற
குடும்பத்தினர்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

(CS 26332) A-1

# INVITATION FOR BID (2023/13)
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

*"Bidding will be conducted through National Competitive Bidding in Public Finance Circular No. 04/2016 (iii) and its amendments" Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated, 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:021 222 4966, Fax: 021 222 9971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table, upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 25.09.2023 until 06.10.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 02.10.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 09.10.2023 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
| NP/04/41/2023/ Unicef/W/05 | Renovation of PHC Building at Saravanai and Allaipiddy | 1.51 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,500.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/22 | Renovation of Patient waiting area at PHC Imayanan | 1.31 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,500.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/26 | Renovation of PHC Building at Suthanthirapuram Vayavilan | 1.49 | 75 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/27 | Renovation of PHC Building at Kuppilan and Kuddiyappulam | 1.22 | 72 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/ Unicef/W/28 | Renovation of PHC Building at Kulamankkal | 0.99 | 70 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/05 | Renovation of Building (Plumbing) at PHC Ponnalai and MOH Changanai. | 0.69 | 62 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 7,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/ Unicef/SW/12 | Water Supply & Sanitary work at PHC Thumpalai and MOH Point Pedro | 0.75 | 63 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 8,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/P SSP/W/55 | Renovation of Ceiling Works of Operation Theatre at BH Tellipplai. | 0.21 | 32 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 3,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/P SSP/W/56 | Improvement work (Stage IV) at Drug Store Health Village Pannai,Jaffna. | 1.41 | 74 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/P SDG/W/03 | Repair And Renovation Of Mo Quarters-(A) At Base Hospital Point Pedro,Jaffna. | 1.22 | 72 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 25.12.2023 |
| NP/04/41/2023/P SDG/W/04 | Repair And Renovation Of No Quarters-(B) At Base Hospital Point Pedro,Jaffna. | 1.39 | 74 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 14,000.00 | Till 25.12.2023 |


**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கந்தையா குணேந்திரதாசன்

(இளைப்பாறிய FORUT, Program Officer)



தொல்புரத்தை பிறப்பிடமாகவும், கந்தர்மடம் மற்றும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணேந்திரதாசன் அவர்கள் கடந்த (17.09.2023) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வமணி அவர்களின் ஆருயிர் கணவரும், தொல்புரத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கரட்ணம் (ஆசிரியை) ஆகியோரின் மகனும், இடைக்காட்டை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், நந்தினி, தர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திவகார், நவரோசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வேணுசா, நிவித்தா, நித்தேஷ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, தனேந்திரராஜன் (லண்டன்), இந்திரானி (மாத்தளை), பஞ்சேந்தராஜன், சர்வலோகநாயகி (ரஞ்சி - பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராணி, சந்திரவதனா, தவயோகநாதன், சலோசனா, ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவல் அவரது மாரியந்தனை இடைக்காடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாரியந்தனை,**
**இடைக்காடு.**
**தொடர்புகட்கு**
**சுஜிகரன் (பேறாமகன்)**
**077 109 9587**

தகவல்:
செல்வமணி (மனைவி) - +94 76 810 8210
நந்தினி (மகள்) - +44 7415 408746
தர்சினி (மகள்) - +61 415 083539
தனேந்திரராஜன் (சகோதரன்) - +44 7915 405 124
இந்திரானி (சகோதரி) - +94 77 6544 830
பஞ்சேந்திராஜன் (சகோதரன்) - +94 77 9850 005
சர்வலோகநாயகி (சகோதரி) - +33 782 629675

(cs 52220) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 • 07 • 1929

மறைவு 21 • 09 • 2023

### சுப்பையா தேவராஜா

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் PWD)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தேவராஜா 21.09.2023 அன்று தனது 94 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், வனசாட்சி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வனமாலா, தேவமாலா, இராஜ்குமார், சுபகுமார், கௌரிமாலா ஆகியேரின் பாசமிகு தந்தையும், தருமசீலன், ராங்கநாதன், காமல், மனோரஞ்சினி, காலஞ்சென்ற குகநாதன் ஆகியோரின் மாமனாரும், கோகுல், திருமதி சாலினி பிரதீபன், கீர்த்தனன், கிஷாந்தி, கௌசிக், செந்தூரன் ஆகியோரின் அனபுப் பேரனும், பத்மராஜா, விஜயரட்ணம், இந்திராணி, காலஞ்னென்றவர்களான சபாநாயகி, தனநாயகி மற்றும் சிவநாயகி, லோகநாயகி ஆகியோரின் தாய் மாமனும், அமிராவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

**203/2, கண்டி வீதி,**
**அரியாலை.**

தகவல்:
**மருமக்கள்**

(cs. 52215) (N-1)

## மரண அறிவித்தல்



### திரு.சுந்தரம்பிள்ளை சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - C.C.T.M.S. School)

யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் குருமண்காடு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுந்தரம்பிள்ளை சண்முகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - C.C.T.M.S. School) நேற்று (22.09.2023) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் மீனாட்சியம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும், யசோதா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், ஜனார்த்தனி (இயன்மருத்துவர் - கனடா), கிருத்திகா (மருந்தாளர் - யாழ் போதனா வைத்தியசாலை), ஸ்ரீராகுலன் (தொழில்நுட்ப பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கவிஸ்வரன் (இயன்மருத்துவர் - கனடா), லதீகரன் (மக்கள் வங்கி - பரந்தன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரபவ் (கனடா), அக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், சுவாமிநாதன், காலஞ்சென்றவர்களான நவநிதியம், இராமநாதன் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr.ஜெகநாதன் (போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி), Dr. நாகபூசனி (கீதா - NHSL), கார்த்திகேயினி (கல்வி உத்தியோகத்தர் - Unicef) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இல.145, மன்னார் வீதி, குருமண்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரீராகுலன்**
**(மகன் - 077 607 2252, 024 222 2865)**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(cs.25810) (N.1)

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 • 06 • 1960

இறப்பு 19 • 09 • 2023

### இராமசாமி கேதீஸ்வரன்

விமான நிலைய வீதி, வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி கேதீஸ்வரன் கடந்த (19.09.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி பாறுவதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, விஜயலஷ்மி, பத்மாவதி, திலகவதி (பிரதி அதிபர்- ஓய்வுநிலை யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்) சோதிமலர், விக்னேஸ்வரன் (கனடா), சியாமளா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஆறுமுகசாமி, கந்தசாமி, தெய்வேந்திரன், ஸ்ரீமுருகானந்தராஜா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், வேற்செல்வன் (கனடா), வினோதினி (பிரான்ஸ்), சுபானி (ஆசிரியை - யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), வருணி (கொழும்பு), குமுதினி, லோஜினி (ஆசிரியை - யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), அங்கயன் (சுவிஸ்), அட்சயன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளிவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கூனன்காடு, வளலாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 726 1976**

(cs. 52207) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




Congratulations!

### Dr.S. பரமானந்தம்

(பீடாதிபதி - யாழ். தேசிய கல்வியற் கல்லூரி)

கல்வியியல் கல்லூரி மாணவர்களின்
கலங்கரை விளக்காக.
ஆசிரிய மாணவர்களைச் செதுக்கும்
தலைமைச் சிற்பியாய்
எதிர்காலக் கல்விச் சமூகத்தின் ஒளிவிளக்காய்
ஒப்பற்ற சேவை செய்யும்
கல்விக்கோர் மகுடமான பரமானந்தப் பெருந்தகையே நீ வாழி !
கல்வியியற் கலாநிதி பட்டம் பெற்றாய் வாழி வாழி !!
கல்விப் புலத்தில் உயர்வு அடைந்தாய் வாழி வாழி !!!

**கல்விசாரா ஊழியர்கள்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

(cs.52206) (N.1)


# கட்டுவன் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 33 ஆண்டுகளின் பின்னர் நேற்று வழிபாடு!

யாழ்ப்பாணம், செப். 23

சுமார் 33 வருடங்களின் பின்னர், கட்டுவன் காசியம்பாள் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தைப் பார்வையிடுவதற்கும், வழிபடுவதற்கும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் எடுத்த முயற்சியின் பயனாக இந்த அனுமதி இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆலயத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. (ம-27-26)

## பயங்கரவாதத்...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

எம்.கே.சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்காக அழைக்கப்பட்டது. நீதிமன்றில் சிவாஜிலிங்கம் முன்னிலையாகியபோதே இந்தக் குற்றப்பத்திரம் அவரிடம் கையளிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27 ஆவது பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினரான திலீபன் என்ற இராசையா பார்த்தீபனின் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை 2020 செப்ரெம்பர் 15ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் கோண்டாவில் கோகுல வீதியில் நடத்தினார் என்றும், 2011 ஓகஸ்ட் 29ஆம் திகதி விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதிகளை மீறினார் எனவும் சிவாஜிலிங்கத்துக்கு எதிராக சட்டமா அதிபர் 2022 ஆம் ஆண்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட 7 தவணைகளும் எம்.கே.சிவாஜிலிங்கம் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. இதற்கு அவர் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற்றமையே காரணமெனக் கூறி, அதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்ட சிவாஜிலிங்கம் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் அவரை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிடியாணை பிறப்பித்திருந்தார். இந்த நிலையில், சட்டத்தரணி உதார முஹந்திரத்தின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் சட்டத்தரணி றியன்சி அரசகுலரத்ன, ரட்ணவேல் ஊடாக சிவாஜிலிங்கம் நேற்று நீதிமன்றில் முன்னிலையானார்.

தமது கட்சிக்காரர் மருத்துவச் சிகிச்சைக்காக இந்தியா சென்றுள்ளதாகவும், இது குறித்து அறிந்த பின்னர் அவர் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் ஆஜராகினார் என்றும் அவரது சட்டத்தரணிகள் சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

சிவாஜிலிங்கத்தின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு அவரை பிணையில் விடுவிக்கவேண்டுமென்றும், அவரை விளக்கமறியலில் வைப்பது அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மேல் நீதிமன்ற நீதிபதி தனக்குள்ள அதிகாரத்தின்படி, பிணை வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த உயர் நீதிமன்ற நீதிபதி, தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் சிவாஜிலிங்கத்தை விடுவிக்க உத்தரவிட்டார்.

பின்னர் இந்த வழக்கை ஒக்ரோபர் 20ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு உத்தரவிடப்பட்டது. சிவாஜிலிங்கத்தை கைதுசெய்தபோது கைப்பற்றிய வாழைக்குற்றி, கற்பூரம் உள்ளிட்ட பொருள்களை பொலிஸார் சான்றுப் பொருள்களாகக் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம-26- 20)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்

## பொது அறிவித்தல்

2024ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பித்தல்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்காக வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்கான முன்மொழிவுகள் பொதுமக்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களிடமிருந்து கோரப்படுகின்றது. எனவே மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகளின் முன்மொழிவுகளை 05.10.2023 ஆம் திகதிக்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


**தொலைபேசி :- 021 225 6647**
**அஞ்சல் :- வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**யாழ்-காரைநகர் வீதி மானிப்பாய்**
**மின்னஞ்சல் :-** VSWPS@yahoo.com

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பய்.**
23.09.2023

(cs 52208 (N.1)



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1957 . 11 . 27

மறைவு
2023 . 09 . 21

## அமரர் இலட்சுமணன் கந்தசாமி
(சாமி)

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இலட்சுமணன் கந்தசாமி 21.09.2023 வியாழக்கிழமை அன்று சுவிற்சர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமணன் - நாகம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜாவின் பாசமிகு கணவரும் சாகனா, சாரு, சுயாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாருஜன், ஜெகதாஸ் ஆகியோரின் மாமனாரும் அமரர் ஐயாத்துரை, அமரர் சரஸ்வதி, சிவக்கொழுந்து, அமரர் முருகேசு, உருக்குமணி, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், அமரர் கந்தையா, அமரர் இலட்சுமணன், அமரர் மீனாம்பிகை, பரஞ்சோமி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**அல்வின் வீதி,**
**காரைநகர்**

**T.P : 076 28 07 669**
**077 87 46 348**

நினைவுகளுடன்
உறவினர்கள்



## ஆதன உரிமையாளரால் குறித்த ஆதனத்தின் உரிமை பிரகடனம் தொடர்பாக

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,தீவுப்பகுதி அல்லைப்பிட்டி, கோவில்பற்று, அல்லைப்பிட்டி இறை, வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் அல்லைப்பிட்டி பிரதேச சபையின் எல்லைக்குள் J/10 அல்லைப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்த பிரப்பந்தாழ்வு சேவையர் அளவின் படி நிலப்பரப்பு 28 குழி 0.69 பனைகளும் வடலிகளும்.

எல்லை கிழக்கு :- ஏரம்பர் தருமலிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம்
எல்லை வடக்கு :- அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி.
எல்லை மேற்கு :- றோமன் கத்தோலிக்க பிஷப்பின் ஆதனம்
எல்லை தெற்கு :- தெரு

மேற்குறிப்பிட்ட ஆதனமானது தவவிநாயகம் சூரியகுமார் 2 ம் வட்டாரம் அல்லைப்பிட்டி அவர்களுக்கு சொந்தமானது.
இவ் ஆதனமானது முப்பத்து எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட ஆவண உரிமையும் ஆட்சி உரிமையும் எமக்கு உரியன.
இவ் ஆதனத்தை போலியான ஆவணங்கள் தயாரித்து சட்டவிரோ நபர்கள் சட்டவிரோதமாக அறுதி விற்பனை செய்ய முற்படுகிறார்கள் எனவே
இவ் ஆதனத்தை வேறு யாராவது வாங்கும் பட்சத்தில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு அவர்களே பொறுப்பாளர்கள் என்பதை அறியத்தருகின்றேன்.

தவவிநாயகம் சூரியகுமாரின்
அற்றோணித் தத்துவகாரர்
( நாகராசா அப்பிகைபாகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பணிகள்; மக்களிடம் கருத்துகள்


### சாவகச்சேரியில் கலந்துரையாடல்

கொடிகாமம், செப். 23

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் தொடர்பில் சமூக அமைப்புகள் மற்றும் பிரதேச மக்களிடம் கருத்துகள் பெறப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை மற்றும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய இரு தினங்கள் சாவகச்சேரி பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் பொதுமக்கள், பொது அமைப்புகள், விவசாய அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் அமைப்புகள், சமூக நலன் விரும்பிகள் பங்கேற்று பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கருத்துகளை வழங்குமாறு சாவகச்சேரி பிரதேசசபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-159)



# வரணி - இயற்றாலை வீதி சீரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 23

சாவகச்சேரி பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் வரணி - இயற்றாலை நாகதம்பிரான் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 3 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் 25 மீற்றர் வரையான வீதி புனரமைப்பு செய்யப்படுகிறது. மழை காலங்களில் குறித்த வீதியால் மக்கள் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் வீதி புனரமைப்பு செய்யப்படுகிறது. (ச-159)

# இறக்குமதிப் பொதிகளுள் போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, செப். 23

**பெல்ஜியம் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனொன்றிலிருந்து 64 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் அடங்கிய பொதியொன்று சுங்கத் திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப் பட்டுள்ளது.**

கொடவத்தையிலுள்ள கொள்கலன் முனையமொன்றில் வைத்து இந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த பொதியில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரி போலியானது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளுக்காக குறித்த போதைப்பொருள் அடங்கிய பொதி பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சுங்க ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி, செப். 23

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் கிளிநொச்சி சேவை சந்தை முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் இலங்கை தொடர்பான விவாதத்தின்போது இறுதிப்போரின் போது கையளிக்கப்பட்ட உறவுகள், வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள், பலவந்தமாக பிடிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் ஆராயவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பகுதியில் அகழப்பட்டுவரும் மனிதப் புதைகுழியானது காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையதா எனவும், அந்தப் புதைகுழியில் உள்ள மனித எச்சங்கள் யாருடையது எனவும் சர்வதேசம் உரிய விசாரணை நடத்தி தீர்வு பெற்றுத்தர வேண்டும்என வலியுறுத்தப்பட்டது. (ஒ-27)



# அணுச் சோதனைத் தடை ஒப்பந்தத்தை ஏற்றது இலங்கை



கொழும்பு, செப். 23

முழுமையான அணுச்சோதனை தடை ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதாக அறிவிப்பதன் மூலம் அணு ஆயுதக் குறைப்பு மற்றும் அணு ஆயுதக் கட்டுப்பாட்டுக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி உறுதிப்படுத்தினார்.

முழுமையான அணுச் சோதனை தடை ஒப்பந்தம் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநாட்டின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், முழுமையான அணுச்சோதனை தடை ஒப்பந்தத்தில் கைசாத்திட்ட 13ஆவது நாடாக இலங்கை விளங்குகிறது. அதன்படி, கண்டி பல்லேகலவில் துணை நில அதிர்வு நிலையமும் நிறுவப்பட்டது. இணக்கப்பாட்டைச் செயற்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, முழுமையான அணுச்சோதனை தடை ஒப்பந்த அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் பிலாய்ட் மற்றும் முழுமையான குழுவின் இடைவிடாத முயற்சிகளையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி பாராட்டினார்.

அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் அண்மைக்கால சவால்களுக்கு மத்தியில், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தின் மீளாய்வு மாநாட்டில், உலகளாவிய பாதுகாப்பைப் பேணுவதில் விரிவான முழுமையான அணுச்சோதனை தடை ஒப்பந்தத்தின் முக்கியமான பங்கை இலங்கை வலியுறுத்தியதோடு, இலங்கை அனைத்து நாடுகளுக்கும், குறிப்பாக ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதை அவசியப்படுத்தும் நாடுகள், அங்கீகரிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். (ஒ-44)

# நிரந்தர வரிக்கொள்கை இன்மையால் முதலீட்டாளர்களுக்கு ஏமாற்றம்!!!

கொழும்பு, செப். 23

இலங்கையில் நிரந்தர வரிக்கொள்கை இல்லாமை முதலீட்டாளர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்துவதாக அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அரசாங்க நிதி பற்றிய குழுவில் வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட மூன்று கட்டளைகள் ஆராயப்பட்டபோதே குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

சவர்க்கார உற்பத்திக்காக இந்நாட்டுக்கு 'சோப் நூடில்ஸ்' இறக்குமதி செய்யப்படுவதாகவும், மேலும் ஒரு சில நிறுவனங்களே பாம் எண்ணெயின் கொழுப்பு அமிலங்கள் இறக்குமதி செய்யப்பட்டு சோப் நூடில்ஸ் உற்பத்தி செய்து வருவதும் கூட்டத்தில் தெரியவந்தது. இருந்தபோதும் இந்நாட்டுக்கு பாம் ஒயில் அமில இறக்குமதியின்போது 24சதவீத புதிய சுங்க வரி அறவிடப்படுவதால் ஒரு சில சவர்க்கார உற்பத்தி நிறுவனங்கள் மாத்திரம் பாம் எண்ணெய் அமிலத்துக்குப் பதிலாக தற்பொழுது குறைந்த வரிப் பெறுமானத்தைக் கொண்ட பாமிடிக் அல்லது லொரிக் ஆகிய அமிலங்களை மாற்றாக இறக்குமதி செய்து சோப் நூடில்ஸ் உற்பத்தி செய்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் கைத்தொழில் அமைச்சின் பரிந்துரைக்கு அமைய சந்தையில் விலை சமநிலையைப் பேணுவதற்கு, அரசாங்கத்தின் வரி வருமானம் இழக்கப்படுவதைத் தடுப்பதற்கும் இந்த மாற்று அமிலங்களுக்கு 29சதவீத புதிய வரி இந்தக் கட்டளையின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஓரிரு நிறுவனங்களை இலக்கு வைத்து அவர்கள் தொழில்நுட்பத்தின் மீது முதலீடு செய்திருக்கும் சூழ்நிலையில் இவ்வாறு வரி அறிவீடு செய்வது எந்தளவுக்கு நியாயமானது என்றும் குழு சுட்டிக்காட்டியது. இந்தத் தொழில்துறையின் தொழில்நுட்ப வினைத்திறனுக்கு வரி அறவிடுவது தொடர்பில் இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

இந்நாட்டில் குறிப்பிட்ட நிரந்தர வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் இங்கு வலியுறுத்தப்பட்டது. எனவே, இந்தப் புதிய வரி விதிப்பின் அடிப்படை மற்றும் குறிப்பிட்ட நோக்கங்கள், அவற்றால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து எதிர்வரும் 22ஆம் திகதிக்குள் அறிக்கை அளிக்குமாறும் அரசாங்க நிதி பற்றிய குழு, நிதி மற்றும் கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தது. (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடை கோரிய...

கொழும்பில் இருந்துவந்த விசேட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்டமா திணைக் களப் பிரதானிகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடத்திய நீண்ட நேரக் கலந்துரையாடல்களின் பின்னர் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

திலீபனின் அஞ்சலி நிகழ்வுகளுக்கு யாழ்ப்பாணப் பொலிஸார் தடைகோரிய மனு முன்னதாக நீதிமன்றத்தால் தள்ளு படி செய்யப்பட்ட நிலையில், கொழும்பில் இருந்து வந்த பொலிஸ் சட்டப்பிரிவுபணிப் பாளர் காளிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட அரச சட்டவாதி சாமிந்த விக்கிரம உள் ளிட்ட குழுவினர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தமது நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர். தமது ஆட்சேபனை யில் அவர்கள், திலீபனின் நினைவுப் பேரணியின்போது இடம்பெற்ற சில விடயங்களை நீதிமன்றின் கவனத்துக் குக் கொண்டுவந்தனர்.

திருகோணமலையில் திலீபனின் நினை வுப்பேரணி மீது தாக்குதல் நடத்திய ஆறு பேர் கைதுசெய்யப்பட்ட விடயத்தையும், இந்தப் பேரணி தடைசெய்யப்பட்ட பயங் கரவாத அமைப்புகளை மீளுருவாக்கம் செய்யும் வகையில் அமைந்திருக்கின் றது என்றும் கொழும்பில் இருந்துவந்த பொலிஸ் சட்டப்பிரிவு குழாமினரும், சிரேஷ்ட அரச சட்டவாதியும் சுட்டிக்காட் டியிருந்தனர்.

இந்த மனு மீதான கட்டளை யாழ்ப்பா ணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று நண் பகல் நீதிபதி அ.அ.ஆனந்தராஜாவால் வழங்கப்பட்டது. இதன்போதே 'திலீப னின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடைவிதிப்பதற்காக நீதிமன்றில் முன் வைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் மன்று திருப்திப்படும் வகையில் இல்லை' என்று தெரிவித்து 'மனுவைப் பரிசீலிக்க மறுத்து' நீதிபதி தள்ளுபடி செய்தார்.

1.'திலீபனின் நினைவுப்பேரணி பயங்க ரவாதத்தை ஊக்குவிக்கின்றது. பயங்க ரவாத அமைப்பை மீளுருவாக்கம் செய்கின்றது என்றால், ஏன் அந்த ஊர் திப் பவனிக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவில்லை? மாறாக அந்தப் பேரணி மீது தாக்குதல் நடத்தியோரே கைதுசெய் யப்பட்டுள்ளனர். ஆதலால், பேரணி சட்டத்துக்குப் புறம்பானது என்ற பொருள்பட விடயத்தை பொலிஸார் அணுகவில்லையே?'

2.ஊர்திப் பவனியோ அல்லது அதை யொட்டிய அஞ்சலி நிகழ்வுகளோ பயங் கரவாதத்தைஊக்குவிக்கும்வகையிலோ அல்லது தடைசெய்யப்பட்ட பயங்கரவா தக் குழுக்களை மீளெழுச்சி கொள்ளும் வகையில் அமைகின்றன என்றால் அதற்குரிய சட்டப்பிரிவுகளின் கீழ் ஏன் பொலிஸார் வழக்கை அணுகவில்லை?

3. யாழ்ப்பாணப் பொலிஸாரின் தடை கேள் மனுவைத் தள்ளுபடி செய்த பின் னர், யாழ்ப்பாணப் பொலிஸார் தம் மனுவில் குறிப்பிட்டது போன்றோ அல் லது இந்தத் தடைகேள் மனுவில் உள்ளதுபோன்றோ எந்த அசம்பாவித மும் யாழ்ப்பாணத்தில் நிகழவில்லை. இவ்வாறிருக்கையில் முன்னைய கட்ட ளையை மறுபரிசீலனை செய்யவேண் டிய தேவை மன்றுக்கு எழவில்லை.

4.பொலிஸார் குறிப்பிட்டதைப் போன்றோ - சமர்ப்பித்ததைப்போன்றோ ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால், அத்தகையவர்களை அந்தந்தச் சட்டப் பிரிவுகளின்கீழ்கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸாருக்கு எந்தத் தடை யுமில்லை.

என்று சுட்டிக்காட்டிய நீதிபதி மேற்படி விட யங்களை கட்டளையாக்கியே மனுவை 'பரிசீலிக்காமலேயே' தள்ளுபடி செய் தார்.

இந்த தடைகோரும் மனுவைச் சமர்ப்பிப் பதற்காக நாட்டின் பொருளாதாரச் சிக்கல் நிலைக்குள்ளும் பெரும் பணச் செல வில் சிறப்புக் குழுவொன்று கொழும்பி லிருந்து ஹெலிக்கொப்டரில் வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## சர்வதேச...

மில்லை' என்று சுதந்திரக் கட்சியின் தலை வரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண் டும் என கடந்த சில நாட்களாகப் பகிரங் கமாகக் கருத்து வெளியிட்டுவந்த நிலை யிலேயே மைத்திரி நேற்று திடீரென மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற் றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரி வித்ததாவது:-

'இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதியை இன்று (நேற்று) காலை சந்தித்தேன். கடிதமொன்றைக் கைய ளித்தேன். சர்வதேச விசாரணையொன்று அவசியமில்லை எனச் சுட்டிக்காட்டி னோம். ஏனெனில் உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணையை நடத்தபோய், நாளை புலிகள், தமிழ்ப் புலம்பெயரிகள் போர் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரக்கூடும். இது எமது நாட்டின் இறைமை மற்றும் சுயாதீனத்தன்மைக்கு பிரச்சினையாக அமையும். எனவே, நாட்டை நேசிப்பவர் என்ற அடிப்படையி லேயே மேற்படி கடிதத்தைக் கையளித் தேன். அதேபோல உள்ளகவிசாரணைக்கு சர்வதேசத்திடம் இருந்து தொழில்நுட்ப உதவி பெறவேண்டும். ஏனெனில் சிறந்த தொழில்நுட்ப வளம் எம்மிடம் இல்லை' - என்றார். (அ-ம-44)

## நீதிக்...

நாடாளுமன்றின் நேற்றுமுன்தின அமர் வில் உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

நீதிபதிகளை அவமதிக்கும் விதத்திலோ, நீதித்துறை உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலோ, நீதிமன்றத் தீர்ப்புக்களை சவாலுக்குட்படுத் தும் விதத்திலோ நாடாளுமன்றத்தினுள் விமர்சனங்களை முன்வைக்கவேண் டாம் என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, நீதித்துறையைப்பற்றி விமர்சிக்கக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் களைப்பார்த்து கூறுவதற்கு சபாநாயக ருக்கு எந்தவித தார்மீக உரிமையும் இல்லை. நீதிமன்ற அதிகாரம் மக்களது இறைமை மூலம் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடாளு மன்ற உறுப்பினரும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள். எனவே நீதித் துறையின் செயற்பாடுகள் தொடர்பில் கேள்வி கேட்பதற்கு நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு அதிகாரமுள்ளது - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், 'எதிர்க் கட்சி பிரதம கொறடா நான் கூறியதைத் தவறாகப்புரிந்துகொண்டுவிட்டார். கடந்த வாரம் சட்டத்தரணிகள் சங்கம் 'நீதித் துறை சுயாதீனமாக இயங்க வேண்டும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதி பதிகளைப்பற்றியும், நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள்பற்றியும்நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் விமர்சித்து வருகின்றனர். இது தவிர்க்கப்பட வேண் டும்' என்று என்னிடம் கோரிக்கை விடுத் திருந்தது. அதையே நான் இங்கு குறிப் பிட்டேன் - என்றார். (அ-ம-6)

## 9 வயதில்...

மருத்துவமனைத் தகவல்கள் உறுதிப் படுத்தியுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதா வது:-

மேற்படி சிறுமி கடந்த ஆறு வருடங்க ளுக்கு முன்னர் - அவருக்கு ஒன்பது வயதாக இருந்தபோது - அயல்வீட்டார் ஒருவரால் துஷ்பிரயோகத்துக்கு உட்ப டுத்தப்பட்டார். இதையடுத்து அவர் நீதி மன்றத்தின் ஊடாக சிறுவர் பாதுகாப்பு இல்லத்துக்கு அனுப்பப்பட்டார். ஆறு வருடங்களின் பின்னர் இவ்வருடம் ஜன வரியில் வீட்டாருடன் சிறுமி இணைக்கப் பட்ட நிலையில், தற்போது சிறியதந்தை யால் அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்ப டுத்தப்பட்டு, கர்ப்பிணியான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார். இது தொடர்பில் மேலதிக சட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. (அ-ம-125)

## வட்டு...

மாலை உணர்வு பூர்வமாகக் கடைப் பிடிக்கப்பட்டது.

அஞ்சலி நிகழ்வுகள் நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினரும், தமிழரசுக் கட்சி யின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவ னின் தலைமையில் இடம்பெற்றது. அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து திலீபனின் அகிம்சைப் பயணம் தொடர் பில் சரவணபவனால் நினைவுப் பேரு ரையும் ஆற்றப்பட்டது.

பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளிர் அணி யினர் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-ம-125)

## 28 ஆவது...

விமானப்படை மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் கொடூரமாகக் கொல்லப் பட்ட 39 பேரின் 28ஆவது நினைவேந் தல் நேற்று உணர்வுபூர்வமாக முன்னெ டுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 21 மாணவர்கள் மற்றும் 18 பொதுமக்க ளுக்குமாகச் சேர்த்து பாடசாலையின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினை வுத்தூபியில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நாகர்கோவில் முருகன் ஆலயத்தில் முற்பகல் 11.30 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டு நினை வேந்தல் நிகழ்வு ஆரம்பமானது. நண் பகல் 12 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப் பட்டது. தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட் டன. (அ-ம-100-66)

## ஆவணக்...

நல்லூரில் உள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக நேற்றுமாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மூன்று மாவீரர்களை உவந்தளித்த தாயார் பொதுச்சுடரை ஏற்றி திலீபனின் ஆவணக் காட்சியகத்தைத் திறந்து வைத்தார்.

தன் உயிரிலும் மேலாகத் தான் நேசித்த மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் பெரும் தியாகங்களைப் புரிந்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டுத் திலீபனின் வரலாற்றினை எமது அடுத்த சந்ததியினருக்குக் கடத்தும் முகமாக தாயகத்தில் பல்வேறு நிகழ்வுகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாகவே 'பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!' எனும் தொனிப் பொருளுடன் கூடிய மேற்படி ஆவணக் காட்சியகமும் திறக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ் வரன், வடக்குமாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்க ளான அருந்தவபாலன், சுகிர்தன், ஐங் கரநேசன், யாழ்.மாநகரசபை முன் னாள் முதல்வர் மணிவண்ணன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## திலீபனை...

திலீபன் நினைவு ஊர்திப் பவனிக்குத் தடை விதிக்கும் வகையில், 106 (1) பிரி வின் கீழ் பருத்தித்துறை பொலிஸார், பருத்தித்துறை நீதமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை தடையுத்தரவினைக் கோரியிருந்தனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை, 'இறந்த வர்களை நினைவு கூர்வதைத் தடுக்க முடியாது. ஏதாவது அசம்பாவிதம் இடம் பெற்றால் 106 (1) பிரிவின் கீழ் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்த பொலி ஸாருக்கு இயலுமை உள்ளது. அவ் வாறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால், குறித்த பிரிவின் கீழ் தடையுத்தரவு வழங்கமுடியாது' என்று தெரிவித்து, அதைத்தன் தீர்ப்பாக்கினார். திலீபனின் ஊர்திப் பவனியின்போது ஏதும் அசம்பாவிதங்கள் இடம்பெற் றாலோ அல்லது இடம்பெறாதுபோ னாலோ அது தொடர்பான மேலதிக அறிக்கையினை எதிர்வரும் 25ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதி வான் உத்தரவிட்டுள்ளார். (அ-ம-100)

## மோ.சைக்கிள்...

வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி குறித்தநபர் மோட்டார் சைக்கிளில் சென் றுகொண்டிருந்தார். அப்போது, பறண் நட்டகல் சந்தியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸை முந்திச்செல்ல முற்பட்டபோது, எதிர்த்திசையில் இருந்து வந்த 'பட்டா' ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து சம் பவித்தது. விபத்தில் தினேசன் சம்பவ இடத்திலேயே பலியானார். சடலம் வவு னியா பொதுமருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மேலதிக விசா ரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு ஈஸ்டர் தாக்குதல்களில் தொடர்பு

கொழும்பு, செப். 23

ஈஸ்டர் தாக்குதலில் இராணுவத்தினருக்கு தொடர்பு இருந்தமைக்கு போதிய ஆதாரங்கள் உள்ளன என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேலும் தெரிவித்ததாவது:-

நான்கு முக்கியமான சம்பவங்கள் உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் இராணுவத்தினருக்குத் தொடர்பு இருந்தமைக்கு ஆதாரமாக உள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த ஒருவரின் காதலியானபொலிஸ்புலனாய்வுப்பிரிவுப் பெண்மணி ஒருவர் சஹ்ரானுக்கும் அவரது காதலனுக்குமிடையிலான தொடர்பு பற்றி இணைய வழியில் வழங்கிய சாட்சியம் புலனாய்வு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது.

தெஹிவளையில்உள்ளவிடுதியொன்றில் குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்ட ஜமீல், தொலைபேசி அழைப்பு ஒன்று வந்த பின்னரே தற்கொலை செய்து கொண்டார். இந்த அழைப்பு சுரேஷ் சாலேயிடமிருந்தே வந்ததாக ஆசாத் மௌலானா சனல்-4 தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

மூன்றாவதாக 2018ஆம் ஆண்டு வவுணதீவில் சஹ்ரான் இரண்டு பொலிஸாரை கொலைசெய்தபோது முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி அஜந்தனே அவர்களைக் கொலை செய்ததாக புலனாய்வுப்பிரிவு அறிவித்தது.

மாவனல்லையில் புத்தர் சிலைகளை உடைத்ததாக இரு முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புபட்ட இராணுவப்புலனாய்வுப்பிரிவினரே இதைச் செய்ததாக சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொலி கூறுகின்றது - என்றார். (ம-6)


## ஆட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

- Receptionist (பெண்)
- சமையல் ஆள் - Cook (ஆண் /பெண்)

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

Golden Star Guest House Jaffna.

077 700 3617, 021 222 0227

## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி றோட் சிற்றி ஹாட்வெயாருக்கு அருகாமையில் மூன்று அறைகள், கிச்சின் மற்றும் வீட்டுடன் இணைந்த மலசல கூடம் மற்றும் குளியலறைகளுடன் புத்தம் புதிய மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், குடும்பங்கள் வைத்தியசாலைகளில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது

077 247 8017, 077 707 0081

## வீடு வாடகைக்கு தேவை

மானிப்பாய்,சண்டிலிப்பாய், சங்கானை, சித்தங்கேணி ஆகிய இடங்களில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

076 782 2472

## வியாபார நிலம் வாடகைக்கு

A9 கண்டி பிரதான வீதியில் சாவகச்சேரி 4 பரப்பு நிலம் நீண்ட கால, குறுகிய கால வாடகைக்கு வழங்கப்படும்.

மின்சாரவசதி, நீர்வசதி, மலசலகூடவசதி, வாகன பார்க்கிங் வசதி, சுற்றுமதில் உள்ள நிலம் வாடகைக்கு தரப்படும்.

(சகலவிதமான வியாபாரமும் மேற்கொள்ளலாம்.

தொடர்பு: 076 249 4592

## தேவை

சல்லி, ஆற்றுமணல், வெள்ளை மணல் விலைக்கு வாங்கப்படும்

075 015 9692

## வேலைவாய்ப்பு

ஆல் சிலோன் புத்தகசாலைக்கு விற்பனையாளர்கள் உடனடியாக தேவை.

தொ.இல: 077 4949 683, 077 077 6469

## Lorry விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள (Original Condition) Iszsu TX Model 26 SRI Hyster Fork Lift (2.5 Ton) - 3 stage Boom

Contact No:075 887 5036

## வீடு வாடகைக்கு

யாழ்நகரில் ST. Bosco க்கும் British Council க்கும் அண்மையில் நாவலர் வீதியில் 4 அறைகள் கொண்ட சகல தளபாடங்களுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

1year Advance + மாத வாடகை 40,000/-

077 251 6160

## வேலையாட்கள் தேவை

காங்கேசன்துறை தையிட்டியில் அமைந்துள்ள மருதம் (பண்ணைக்கு) Farm தங்கி நின்று வேலைசெய்வோர்கள் தேவை. இடவசதியுண்டு. குடும்பமாக தங்கி வேலைசெய்யும் வசதியுண்டு. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

077 747 4498

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 78 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389


மல்யுத்தப் போட்டி

## மணற்காடு றோ.த.க. வென்றது வெண்கலம்

யாழ். செப். 23



தேசிய மட்ட 18 வயதுப் பிரிவு மல்யுத்தப் போட்டியில் மணற்காடு றோ.த.க. பாடசாலை மாணவன் அன்ரன் யூட் ரமேஸ் ஸ்மித் ராஜ் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய மட்ட மல்யுத்தப் போட்டிகள் கண்டியில் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மல்யுத்தப் போட்டியிலேயே வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கினார். (ச-100)


## உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக தெளிவூட்டல் கருத்தரங்குகள்.

உள்ளூராட்சி மன்றங்களினால் 2021 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) கீழ் வடமாகாணத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் 2023 / 2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைகள் தொடர்பில் பொதுமக்கள் தமது கருத்துக்களை பின்வரும் இரு தினங்களில் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் நேரடியாக வழங்கலாம்.

கருத்தறிதலுக்கான 1வது கூட்டம் : 25.09.2023 (திங்கட்கிழமை)
2வது கூட்டம் : 30.09.2023 (சனிக்கிழமை) } பி.ப. 2.00 மணி

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து

உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை, உப அலுவலகங்கள் மற்றும் நூலகங்களிலும்

வடமாகாண சபையின் www.np.gov.lkஎன்ற இணையத்தளத்திலும்

பொதுமக்கள் பார்வையிட்டு,
தமது கருத்துக்களை உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க முடியும்

வேலைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்கான கூட்டம் 06.10.2023 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் இடம்பெறும்.

உள்ளூராட்சி ஆணையாளர்,
வடமாகாணம்.
23.09.2023

(ct.40606) (N.1)

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை நவாலி றோட்டில் 15 பரப்பு வயல்க்காணி விற்பனைக்குண்டு

077 199 6117

ALLIANCE FRANCAISE DE JAFFNA

## af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf )
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளி கருவி 16 லீட்டர் (Sprayer) சில்வர் பிளாஸ்டிக் காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டது மான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



ஆர்க் என்ரபிறைசஸ்

102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571

Hotline: 071 535 7799 / 071 973 9917


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 23.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org